போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

SEPTEMBER 11, 1923.

ந. 17 (2).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923 ம்௵ ஸெப்டெம்பர் ௴ 11௳. [விலை, 3 பை.

இந்தியா கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மென்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1923-ம்௵ ஜூலை ௴ 27௳ இந்திய சட்டநிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது:—

No. 33 OF 1923.

1923-ம்௵த்து 33-வது நெ.

A BILL TO REGULATE THE ENTRY INTO AND RESIDENCE IN BRITISH INDIA OF PERSONS DOMICILED IN OTHER BRITISH POSSESSIONS.

இதர ப்ரிடிஷ் நாடுகளிலே நிலையாய் வாசம் செய்யும் நபர்கள் ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் பிரவேசிப்பதையும் அதில் வாசம் செய்வதையுங்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கான மசோதா ஆக்ட்.

யுனைடெட் கிங்டம் என்னும் ஐக்கிய ராஜ்ஜியமல்லாமல் ப்ரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் இதர பாகங்களில் நிலையாய் வாசம் செய்யும் நபர்கள் ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் பிரவேசிப்பது விஷயமாயும் அதில் வாசம் செய்வது விஷயமாயும் பரஸ்பரம் ஒரே மாதிரியாய் நடத்தப்பட வேண்டுமென்னும் கொள்கையை அனுசரித்து நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் ;—

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, இந்தியாவில் குடியேறுவதைக் குறித்த 192 -ம்௵த்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் பிரசித்தம் செய்யக்கூடிய தேதியன்று செலாவணியாகத் தொடங்கும்.

(3) இது - ப்ரிடிஷ் பலுசிஸ்தானம் அடங்க ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதம் ஒன்றும் இல்லாவிட்டால்,—

(a) "ப்ரிடிஷ் நாடு" என்பது - யுனைடெட் கிங்டம் என்னும் ஐக்கிய ராஜ்ஜியம் நீங்கலாக மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் ராஜ்ஜியங்களைச் சேர்ந்த யாதொரு பாகம் என்று அர்த்தமாவதுமல்லாமல் அதில் ப்ரொடெக்டொரேட் என்னும் பாதுகாப்பு நாடுகள் என்பதும் சர்வதேச சங்கத்தின் கட்டளையின்படி சுயாதிபத்தியமுள்ள யாதொரு ராஜ்ஜியத்தால் பரிபாலிக்கப்பட்டுவரும் தேசங்கள் என்பதும் அடங்கும் ;

(b) "நிலையான வாசஸ்தலம்" என்பது - யாதொரு நபர் சாசுவதமாய் வாசம் செய்கிற இடம் என்று அர்த்தமாகும் ;

(c) "பிரவேசம்" என்பதில், ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியேயுள்ள யாதொரு இடத்துக்குப் போகும் கப்பல் வழியில் நிற்கும் கால அளவிலே, ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு ரேவில் கரையில் இறங்குவது என்பதும் அடங்கும்.

ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் பிரவேசிப்பதையும் அதில் வாசம்செய்வதையும் குறித்த விதிகள்.

3. ப்ரிடிஷ் நாடுகள், பாதுகாப்பு நாடுகள் அல்லது மாண்டேட் என்னும் கட்டளையின்படி சுயாதியத்திபமுள்ள யாதொரு ராஜ்ஜியத்தால் பரிபாலிக்கப்பட்டுவரும் தேசங்களின் சட்டங்களாலும் பரிபாலகர்களாலும் இந்தியாவிலே நிலையான வாசஸ்தலமுடைய நபர்களுக்கு என்ன பாத்தியதைகளும் சுதந்தரங்களும் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகின்றனவோ அதே பாத்தியதைகளும் சுதந்தரங்களும் அப்படிப்பட்ட யாதொரு ப்ரிடிஷ் நாட்டிலாவது பாதுகாப்பு நாட்டிலாவது மாண்டேட் என்னும் கட்டளையின்படி பரிபாலிக்கப்பட்டுவரும் தேசத்திலாவது நிலையாய் வாசம் செய்யும் நபர்களுக்கு ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் பிரவேசிப்பது விஷயமாயும் அதில் வாசம் செய்வது விஷயமாயும் ஏற்படும்படி செய்வதற்காக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதிகள் செய்யவேண்டும்.

இரண்டு சட்டசபைகளின் முன்னிலும் வைத்து அங்கீகரிக்கப்படுகிற வரையிலே விதிகள் செலாவணியாகக்கூடாதென்பது.

4. (1) இந்த ஆக்ட் 3-வது பிரிவின்படி செய்யப்படும் எந்த விதிகளும் - அவை இந்திய சட்டநிரூபண சம்பந்தமான இரண்டு சபைகளின் முன்னும் மசோதா ரூபமாய் வைக்கப்பட்டு, யாதொரு திருத்தம் செய்யாமலாவது யாதொரு நிபந்தனையைச் சேர்க்காமலாவது இரண்டு சபைகளும் ஒப்புக்கொள்ளுகிற திருத்தங்கள் செய்தும் நிபந்தனைகளைச் சேர்த்துமாவது அந்த மசோதா ஒவ்வொரு சபையாரின் தீர்மானமூலமாகவும் அங்கீகரிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, எவ்விதமாகவும் செலாவணியாகமாட்டா.

(2) சட்டநிரூபண சம்பந்தமான இரண்டு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டபடிக்குள்ள விதிகள் இந்தியா கெஜெட்டில் பிரசித்தம் செய்யப்படவேண்டும் ; அதன்மேல், அவை சட்டத்தைப்போல் செலாவணியாகும்.

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களுக்கு ஆலோசனைசொல்வதற்காக இரண்டு சபைகளிலிருந்தும் கம்மிட்டி ஏற்படுத்துவது.

5. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இதர ப்ரிடிஷ் நாடுகளிலும் பாதுகாப்பு நாடுகளிலும் மாண்டேட் என்னும் கட்டளையின்படி பரிபாலிக்கப்பட்டுவரும் தேசங்களிலும் நிலையாய் வாசம் செய்யும் நபர்கள் இந்தியாவுக்குள் பிரவேசிப்பது விஷயமாயும் வாசம் செய்வது விஷயமாயும் அந்த ப்ரிடிஷ் நாடுகள், பாதுகாப்பு நாடுகள், மாண்டேட் என்னும் கட்டளையின்படி பரிபாலிக்கப்பட்டுவரும் தேசங்கள் ஆகிய இவைகளுடன் பரஸ்பரம் ஒரே மாதிரியாய்ப் பரிபாலன ஏற்பாடுகள் செய்துகொள்வதற்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களைக்குறித்தும் தமக்கு ஆலோசனை சொல்லும்பொருட்டு இந்திய சட்டநிரூபண சம்பந்தமான இரண்டு சபைகளிலிருந்தும் கம்மிட்டி ஒன்றை நியமிக்கவேண்டும் ; அதில், மூன்றில் இரண்டு பங்குகளுக்குக் குறையாதவர்களை, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்கள் நிச்சயிக்கக்கூடிய சங்கியாபரிமாணப்படி ஷை இரண்டு சபையார்களும் தெரிந்தெடுக்கவேண்டும்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

6. இந்த ஆக்ட் 3 - வது பிரிவிற்கண்ட அதிகாரங்களின் பொதுத் தன்மைக்கு பாதகமில்லாமலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - விதிகள் செய்து, அந்த விதிகளைக்கொண்டு—

(a) அந்த விதிகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக தகுந்த உத்தியோகஸ்தர் முதலியவர்களை ஏற்படுத்த நிபந்தனை காணலாம் ; அவர்களின் அலுவல்களையும் அதிகாரங்களையும் வரையறுக்கலாம் ;

(b) ஷை விதிகளை மீறி நடந்தாலும், அவைகளை மீறி நடக்க எத்தனம் செய்தாலும், அந்தப்படி மீறி நடப்பதற்கு உடந்தையாயிருந்தாலும் தகுந்த தண்டனைகள் ஏற்படுத்தலாம்; மேலும்,

(c) அப்படிப்பட்ட யாதொரு விதியை மீறி நடக்கிற அல்லது மீறி நடப்பதாக நியாயமாய்ச் சந்தேகிக்கப்படுகிற யாதொரு நபரைப் பிடிக்க அதிகாரம் கொடுக்கலாம்; அந்தப்படி பிடிப்பது சம்பந்தமாய் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களின் கடமைகளை நிர்ணயிக்கலாம்.

நிவாரணை செய்யப்படும்படி சுதந்தரித்துக்கேட்கும் நபர் தம்முடைய வாதத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது.

7. ப்ரிடிஷ் இந்தியாவைத் தவிர இதர ப்ரிடிஷ் நாடுகளில் நிலையாய் வாசம்செய்வதாகவும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டிருப்பதாகவும் சொல்லப்படும் யாதொரு நபர் தாம் அந்தப்படி நிலையாய் வாசம் செய்யவில்லையென்றாவது ஷை ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் தமக்குப் பிரயோகப்படமாட்டாவென்றாவது வாதம் செய்யும்பட்சத்தில், அந்த வாதத்தின் உண்மையை ருஜுப்படுத்தும் பொறுப்பு மேலேகண்ட நபரைச் சேர்ந்ததாகும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

மஹாராஜ சக்ரவர்த்தியவர்களுடைய ராஜ்ஜியங்களின் வெவ்வேறு பாகங்களில் வாசம் செய்யும் ப்ரிடிஷ் குடிகள் பரஸ்பரம் ஒரே மாதிரியாய் நடத்தப்படவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டு ஏகாதிபத்திய மகாநாட்டார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதே இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும். இந்தியர்களைத் துன்புறுத்தும் நிர்ப்பந்தங்கள் ஏற்படும்படியாகப் பிறப்பிக்கப்பட்ட சகல சாசனங்களையும் தென் ஆப்பிரிக்காவின் யூனியன் கவர்ன்மென்டார் சிறிதுகாலத்துக்கு முன் அங்கிகரித்திருக்கிறார்கள். மேலும், இந்தியர்களைப் பிரத்தியேகப்படுத்திவைக்கும் நோக்கத்துடன் அடுத்த வருஷத்தில் சட்டநிரூபணம் செய்வதாகவும் வாக்குதத்தம்செய்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பங்களில், பரஸ்பரம் ஒரே மாதிரியாய் நடத்தப்படவேண்டுமென்னும் கொள்கையை அனுஷ்டிக்கும்படிச் செய்யும் அதிகாரத்தை இந்தியா கவர்ன்மென்டாருக்கு இந்திய சட்டநிரூபண சபையார் ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமாகும்.

எச். எஸ். கௌர்.

1923-ம்௵ ஜூன்மீ 22உ.

எல். க்ராஹம்,
இந்தியா கவர்ன்மென்ட் அபிஷியேடிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.